உ

கடவுள்துணை

செல்வப்பிள்ளை அகடவிகட

கலியாணச்சிந்து



இவை-சிறுமணவூர்

முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு,

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியாரது

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1897.

உ

கடவுள் துணை.

வந்தாவா போநாபோ,

லோபிச்சிந்துயென்னும் இயற்பெயருடைய

அகடவிகடகலியாணச்சிந்து.

——(✤✤✤-✤-✤✤✤)——

தொப்பைவணக்கம் நேரிசைவெண்பா.

கைகாலுந் தொந்தியெலாங் காணபயமாய்வீங்கி
மெய்தூக்கமாட்டாத மேதகனே—பொய்யேன்காண்
செல்வமகனுர்க்கு செய்யும் விவாகத்திலுனே
சொல்லா திருப்பேன் துணை.

குரவன்துதி புராணவிருத்தம்.

மலரெரீத்தவனைக்காய்ந்த மடையனுர் மகனேநல்ல
குலமதைகண்டுகொள்ளாக் குருடனேகூரக்கேளாய்
தலமதில்விகடஞானத் தனையனுர்மணத்தின்போது
சிலைசுமைக்குரவாவுந்தன் சேவடியெனக்குப்போற்றி,

தகப்பனுராகிய லோபிசொல் தெம்மாங்கு,

யென்மகனேகண்மணியே • கொஞ்சம்
  ஈஸ்பீசுகற்றவனே
கலியாணமென்றுசொல்லும் ஒரு
  கடனிருக்குதெங்களுக்கு (நா.)

சிந்து.

பெண்ணும்படிந்தாச்சு பணமுந்துகையாச்சு
யிடமுங்குதுந்தாச்சு யெல்லாம்முடிந்தாச்சு
முன்னேபெரியவர்கள் முழுதும்பிழைத்திருந்த
நாட்டுப்புரம்போய்வருவோம் நடடாமகனேயப்பா (கா)

இதுவும் லோபிசொல் தெம்மாங்கு,

பட்டணத்தில்செய்வமென்றால் அப்பா
  பகல்வேஷம்போடவேணும்
தட்டுமுட்டுஆட்டமொடு கொஞ்சந்
  தலையொடிநிற்கவேணும் (கூ)

Digitized by Roja Muthiah Research Library

இதுவும்-லோபிசிந்து,

பத்திலவிழுந்தகொரு பாம்புமடியாதென்று
மெத்தப்பெரியவர்கள் யிட்டப்பழமொழிபோல்
ஆயிரங்காலப்பயிர் ஆகையினால்மகனே
உரவில்லலந்துக்கொண்டால் ஒருபோதுங்குற்றமில்லை. (௩௧)

செல்வப்பிள்ளை-சொல்-தெம்மாங்கு,

உரவும்வராகாச்சிஅந்த ஊர்முஞ்சுங்காஞ்சிப்போச்சி
ஐனோனைக்குஅந்த ஆகரவுந்தேவையில்லை (௩௨)

சிந்து,

டோண்டுனோபாதரந்த தொல்லையெனக்குவேண்டாம்
நாட்டுப்புரங்களெல்லாம் நான்ஸன்ஸ்வுதவாது
பைகாட்பிரதர்களோடு பட்டணங்கள்ளிலே
பக்குவமாய்செய்யவெகு மிக்கவுரவிருக்குது (௩௩)

லோபிசொல்-தெம்மாங்கு

அடவுன்-படிப்பில்யிடியிடிக்க அந்த
பாஷையொன்றுந்தெரியலியே
நம்குடிவழக்கிலில்லாத
கோணலெல்லாங்காட்டுகிறாய் (௩௪)

சிந்து,

எரியேமோட்சலோகம் யேத்தமேகைலாசம்
கழனியேபஞ்சாங்கம் கலப்பையேவேதாந்தம்
மண்ணேபிரதானம் மண்வெட்டியேசாஸ்திரம்
யிப்படிப்பிழைத்துவிட்டோம் உன்னிழவுக்கென்னசெய்வோம்

செல்வப்பிள்ளைசொல்-தெம்மாங்கு,

மாட்டைக்குத்திமண்கிளரி இந்தமானமதைப்பார்த்தழுகும்
டேபிளீகட்கண்டிதீபூல் நீ தொணதொணவென்றுபேசாதே (௩௫)

சிந்து,

ஸ்டிரீட்முழுதும் பந்தல்வேணும் சிங்காரக்கொட்டாய்வேணும்
வால்சேட்டுகுளோப்புலஸ்தர் வரிசையாய்மாட்டவேணும்
பிரண்டுகள்ஷேகேன்கொடுத்து பிலமாய்புலாத்கவேணும்
ஸ்டவுட்பீமில்ஸ்லேடிகளால் சதுர்கள்நடக்கவேணும்
கச்சேரிகாலட்சேபம் காலைமாலைபாடவேணும்
பிரஞ்சுபுல்லாகிச்சடிகள் பிச்சைக்கொடுக்கவேணும்
அதிர்வேட்டுமேளவகை அண்டங்கிழியவேணும்
இப்படிநடத்திடாமல் தப்புந்தாறுபண்ணுகிறாய் (௩௬)

ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106

Digitized by Roja Muthiah Research Library

லோபிசொல்-தெம்மாங்கு,

பட்டணத்தில்முட்டவைத்து அப்பா உன்னை
படிபடியாய் நான்வளர்த்து
நண்டுக்குடம்விட்டதுபோல் என்பணத்தை
நாலுவழி யாக்கவந்தாய் (நாலு)

செல்வப்பிள்ளைசொல்-சிந்து.

நாலுவழிமூணுவழி நாலுமூணும்எழுவழி
யெந்தவழிபோனாலென்ன வந்தவழிபோகுது
காடும்அழைக்குதங்கே வீடுந்தூரத்துதிங்கே
போடாயுன்கட்டிசுவர் பணம்போனால்மயிர்போச்சி (நாலு)

செல்வப்பிள்ளைசொல் விருத்தம்.

அல்லோயென்பிராணனான பிரதர்களே தோழமாரே
பொல்லாதகிழவனையேனு பிடிவாதமிபற் றுகின்றான்
நல்லநாள்பார்த்தேன்சற்று நமக்குநீர்உதவிசெய்தால்
யெல்லாருஞ்சேர்ந்தயின்றே யெமபுறங்காட்டலாமே,

தரு.

எட்டியுதையுமெந்தன் மிஸ்டரே - ஒரே
தட்டாய்தட்டிப்போடும் மிஸ்டரே

மட்டிக்கிழவன்சும்மா மனமும்பொறுக்கமாட்டான்
மயிலைப்போன்றவேசி மார்க்குங்கொடுக்கமாட்டான் (யெ)

பரத்தையர்சுகமிந்தப் பாவியறியமாட்டான்
பணத்தைப்புதைத்துவைத்து பூதமபோல்காக்குறான் (யெ)

அறுமைமேலடிகள்சுகம் அணுவுமறியமாட்டான்
சிறுமணவூர்தமிழ் சொல்லுங்கேழ்க்கமாட்டான் (யெ)

(வ-ம்) இவ்விதமாக பிரண்டுகளோடு கூடிக்கொண்டு அகஸ்மாத்தாக அடல்தடல்வேடிக்கை யுண்டுபண்ணி கிழவனுக்கு ஆனமட்டும் சரிப்படுத்தி மூலையில்தள்ளிவிட்டு சினேகிதர்களுக்கு உபசாரப்படுத்து இறவிதங்காண்க,

செல்வப்பிள்ளைசொல் ஆனந்தக்களிப்பு,

பைகாட்சிநேகரேவாரும்—எந்தன்
பணம்போனால் போகட்டும் வேடிக்கைபாரும் (பை)

பெற்றோர்மனம்நொந்து வேகட்டும்-நம்ம
பேர்மாத்திரங்கோட்டை கொடிபோல்பரக்கட்டும்
உற்றாரெல்லாம்சாகட்டும் சரிபாய்
ஒவ்வொருஆயிரம் தூசிபோல்பறக்கட்டும்

Digitized by Roja Muthiah Research Library

வேசியெல்லாம்நம்மை நினைக்கட்டும்-தினம்
வீண்தர்மம்செய்வோர்கள் ஆந்தைபோல்முழிக்கட்டும்
ராஜனென்றேநம்மை மதிக்கட்டும்-நல்ல
ரயிட்டான டப்ளார்சு பிட்டீன்கள் பரக்கட்டும் (பை)

சென்னையிலேபுகழ் விளங்கட்டும்-சிறு
மணலூர்முனிசாமி தமிழாசுசொல்லட்டும்
பன்னிபேவுலகெங்கும்படிக்கட்டும்-இதை
பாடிவிற்போர்களும் சிலதுநாள் பிழைக்கட்டும் (பை)

செல்வப்பிள்ளை-சிநேகருக்குசொல்-விருத்தம்,

திக்கெட்டும் புகழ்படைத்தோ னெனக்கிசைந்த
செல்வர்களே சிங்காரத் தோழமாரே
மற்கட்டுந்தீரர்களே பணங்கரைக்க
மந்திரிபோல் தந்திரங்கள் செய்யும்பாரே
டிக்கட்டும்போட்டெந்தன் கலியாணத்தை
திரைகடல்சே ருலகமெல்லாந் தெரியவிக்க
சொற்கட்டும் வந்தனங்கள் முகூர்த்தகாலம்
சுருக்காக யெழுதி நிறைவேற்றுவீரே,

ஆஆ-யெனது அரியவிரிய பெரியபிரியமுள்ளசெல்வப்பிள்ளையே கேளும் நம்ம டிக்கட்டைபார்த்தாலோ இந்திரன் அனுப்பிய திருமுகம்போலிருக்கவேணும் அதில்உள்ள சங்கதிகளோ திருமூர்த்திகளும் அறியக்கூடாது ஏனென்றால் தாய்வுரவென்றும் தந்தையுர வென்றுமந்தைமந்தையாகவந்து சோத்தைவலித்து பார்த்தவிடமெங்கும்பதுங்குவார்கள் ஆகையால் அந்தபணத்தையெல்லாம சங்கீதசாயித்தியபரதநாட்டியசுகபோகத்திற் சிறந்த நமது அருமைக்கண்மணிகளாகிய லேடிகளுக்கு முத்து ஆரங்கள் தோடாக்கள் கண்டாமணிகள் நவலோகங்களால் அமைந்த சேலைமுதலிய ஆடையாபரணாதிகளை பரிசுக்கொடுப்போமானால நம்மபெயர் யென்னைறக்கும் அழியாதிருக்கும் ஆகையால் டிக்கட்டுமாத்திரம்இக்கட்டாகவேயிருக்கவேணும் மிஸ்டரே

செல்வப்பிள்ளை

கலியாணடிக்கட்டின்விபரம்.

தொண்டிச்சிந்து.

திகழ்மகிழ்புகழ்படைத்த-சென்னைவளர்
செல்வர்களேவிபரம் சொல்லுவன்கேள்
நிகழுமிங்கிலீஷ்வருஷம் ஆயிரத்தி
யெண்ணூத்திதொண்ணூத்தி யொண்ணில்புகுந்து
நழுவியதமிழாண்டு-மகாஜீத்து
வருஷங்கூத்தாடிமாதம் நாற்பதாந்தேதி

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST. - TAMIL NADU - INDIA

Digitized by Roja Muthiah Research Library

உக்கிரவாரம் சிங்கமுகத்தில்-இருவர்க்கும்
ஒருமித்த சுபதினம் மரணயோகத்தில்
காலையில்ஒருமணிக்கி-வாய்திறந்து
கண்டமீனை துண்டுபூனை லக்கினத்திலே
எனனிட தஷ்டைபுத்திரன்சிரஞ்சீவி
யேனிபோலே பல்நீண்ட ஆசாமிக்கும்
தானறியாத ஊருக்கு-மணியம்
தாசில்முனிசிப்புமகள் பேகபுத்திரி
பஜாரிவேங்கையம்மாள்-இருவருக்கும்
பத்திரிகைசொன்னபடி சுபதினத்தில்
வெள்ளைபட்டணம்நடுவில்-ஐயா
கொள்ளையடித்தான்மூலை பள்ளத்தெருவில்
அப்படியிப்படியுந்தள்ளி மீடார்நெம்பர்
ஆனமட்டுமெயனவீதி செங்கல்கிரகத்தில்
நடக்கும்முகூர்த்தத்திற்கும்-மறுநாள்
நாலுபேர்க்குமுன்கொளுத்தும்-அக்கினிபேட்டிக்கும்
இடையுபவாசத்திற்கும்-தங்கள்
இஷ்டருக்கும்இஷ்டரோடு கஷ்டமாய்வந்து
மேல்படிசுபகிரிகை-அனர்த்தத்தை
மெள்ளமெள்ளகெட்டியே நடத்துவீரென்று
மண்டிபோட்டுவிண்ணப்பஞ்செய்து-தங்கள்
கீழானகனத்தைகொஞ்சம்பிரார்த்திக்குரேன் (௧௨)

செல்வப்பிள்ளைசொல்லாவணி.

வல்லமைமிகுந்த - செல்வரேவுமது
கல்விகள்மிகசீறே-ஐயா
வளமாய்நோட்டுசு பலமாயெழுதிநீர்
வருவார்வெகுபேறே
வாரமும்யோகமும் யிப்படியமைந்திட
வரிந்தீர்பஞ்சாங்கம்
வையகத்திலுமக்குநான் கைம்மாறுசெய்திட
வரியேன்மெஞ்ஞானம்
செல்வத்தில்மிகுந்த சீமானென்றெனக்கு
செய்தீர்வுபகாரம்
சிறுமணவூர்முனிசாமி சொல்தமிழுக்கு
செய்வேன்நமஸ்காரம்

சினேகிதர்சொல் அலங்காரம்,

யிக்கட்டுமாத்திரமே தீர்ந்ததென் றுயெங்கள்பேரில்
டிக்கட்டுநினைக்கவேண்டாம் யெல்லாவேலையுந்தீர்ந்துதையா. (௧௩)

Digitized by Roja Muthiah Research Library

புந்தல்முழுதுந் தீர்ந்துபோச்சி
பாவைநடனக் கொட்டாயாச்சு
அந்தமான மயிடடுதினுசு
ஆயிரவரிசை மாட்டியாச்சு
ஐயா-யானைமுகமுகு தேங்குகுலைகள்
வர்ணக்கூந்தல் ஈச்சங்குலைகள
தாழையநுகு குருவேர்தவனம்
தரித்தரஞ்சிதம் மதனபாணம்
ஐயா-சகலவேலையும் முடிந்துபோச்சி
சரியாய்முகூர்த்தம் நெறிங்கிபோச்சி (௧௩)



(தெம்மாங்கு) அமாவாசைதுருவகாலம்ஆருயிர்க்குமரணயோகம்
வேளைதப்பிப்போகுமுன்னே வலித்துக்கழுத்தில்யிழுத்துக்கட்டுவீர்.

ஐயா-பொழுதுவிடிந்தால் கூட்டஞ்சேரும்
பிண்டாசோத்துக் கிழவுகொடுக்கும்
விடியயிரண்டு ஜாமமிருக்கும்
வேலையிப்பவே நடத்திப்போடும்
ஐயா-வந்தபேர்கள் வழியேபார்க்கட்டும்
வாத்தியக்காரர்கள் குந்தியழட்டும்
சார்ஜிகேட்டால் யிழுத்துஉதைப்போம்
சம்மன்கொணர்ந்தால் கவுந்துபடுப்போம்
இந்தயுத்தியும் சொல்லவேணுமோ
ஏனோயிப்படி முழித்தாலாகுமோ (௧௪)

Digitized by Roja Muthiah Research Library

(தெம்மாங்கு) பஞ்சாங்கந்தப்பாமலே பலஜெனமுஞ்சேராமலே
அஞ்சாறுபேருயர்த்த ராத்திரியில்நடத்திபோட்டார் (நன்)

ஐயா-பொழுதுவிடிந்து பூனை தூங்குது
போகஜெனங்கள் வழியைபார்க்குது
பொவுஷுகெட்டோம் ஓடிவந்ததில்
பொழைக்கும்பொழப்பும் போச்சேயென்குது

ஐயா-ஜெனங்கள்யிப்படி கலையும்போது
செல்வப்பிள்ளையும் முடிக்கியெழுந்து
டர்ட்டீபலர் பாப்பான்காணம்
சனவர்பீச்சு யெலனுங்காணம்

ஐயா-போலீஸ்சார்ஜி பண்ணிபோடுவேன்
பிடித்துஜெயிலுக் கனுப்பிவிடுவேன் (நன்)

(தெம்மாங்கு) காசில்லாக்கலியாணங் கன்குளிரவேநடத்தி
யீசனருளால்வருஷம் யிரண்டிரண்டுபிள்ளைபெருவார் (நன்)

ஐயா-தவரும்பிள்ளைகள் காலையிழுக்க
தாண்டும்பிள்ளைகள் கையைபிடிக்க
உயர்ந்தபிள்ளைகள் வேட்டியிழுக்க
வீடுமுழுதும் யிரச்சலெடுக்க

ஐயா-வீடுநிரைந்த பிள்ளைகளோடு
வயருநிறைந்த குழந்தையோடு
கைகள்நிறைய செல்வரோடு
கடவுளருளால் ஆயிசோடு

ஐயா-செழித்துவாழ்ந்தார் சுகமாயிருந்தார்
பழுத்தகிழமாய் படுத்துமிருந்தார் (நன்)

(தெம்மாங்கு) புலவரடிமரவாப் பிள்ளைமுனிசாமிகவி
உலகரியஅச்சிலிட்ட உத்தமரைகேள்மனமே (ந)

கடல்நிறைந்த வுலகுக்குள்ளே
கன்னியாகுமரி வளவுக்குள்ளே
ஊருக்கெல்லாம் அன்னையென்று
வுரைக்குஞ்சென்னை நகருக்குள்ளே

அடியே ஆனைகெவுனி பாளயம்நெடுக்கே
ஆதியப்பன் வீதிவந்தே
தேனூர்மதுவின் கடையைவிற்றே
செழித்துவாழும் நல்லமனதே

அடியே-காந்தரிஷியின் கோத்திரமாம்
கண்ணேபெயரும் ஆருமுகமாம் (நன்)

அகடவிகடகலியாணச்சிந்து-முற்றிற்று.

Digitized by Roja Muthiah Research Library